

சென்னை கிழக்கு மாவட்டப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பொறியாளர் எம்.எஸ்.ரமேஷ் மகள் செல்வி ஊர்மிளா ரமேஷ் மற்றும் செல்வன் ராவூரு லோகித் திருமண விழாவில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் சா.மு.நாசர் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தினர். உடன் தமிழ் நாடு சேமிப்பு கிடங்கு தலைவர் பா.ரங்கநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன் ஆகியோர் உள்ளனர்.

சென்னை அமைந்தகரையில் எம்.ஜி.எம், பல்நோக்கு தனியார் மருத்துவமனை சார்பில் நடைபெற்ற புற்றுநோய் விழிப்புணர்வு நடைப்பந்தயத்தை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார் அருகில் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு மற்றும் மருத்துவர்கள் செவிலியர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம் மற்றும் குமராட்சி பகுதிகளில்

ரூ.4 கோடி மதிப்பீட்டிலான அரசு கட்டடங்கள்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்!

கடலூர், அக். 22- வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார், தலைமையில் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனை செல்வன் முன்னிலையில் ஸ்ரீமுஷ்ணம் மற்றும் குமராட்சி வட்டாரங்களுக்குட்பட்ட பகுதி களில்ரூ.4 கோடி மதிப்பீட்டிலான அரசு கட்டடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு 19.10.2024, சனிக்கிழமை திறந்து வைத்தார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் குமராட்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூடுவெளிச்சாவடி, வெள்ளூர் மற்றும் அத்திப்பட்டு ஊராட்சிகளில் கட்டப்பட்டள்ள ஊராட்சி செயலக கட்டடங்களை திறந்து வைத்ததோடு, வல்லம்படுகை ஊராட்சியில் வேளக்குடி பழையகொள்ளிடகரையில் 10 இலட்சம் பனை விதை நடும் பணியினையும் துவக்கி வைத்தார்.

ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புடையூர் மற்றும் முடிகண்டநல்லூர் ஊராட்சிகளில் ஊராட்சி செயலக கட்டடங்கள், சோழத்தரம் ஊராட்சியில் ஊராட்சி மன்ற கட்டடம், இராமாபுரம் ஊராட்சியில் அங்கன்வாடி மையக் கட்டடம், மேலும் அவ்வூராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம், மேலப்பாலையூர் ஊராட்சியில் சுய உதவிகுழுக்களுக்கான பணிக்கூடம், நங்குடி, காவாலக்குடி, முடிகண்டநல்லூர், எசனூர், மலைமேடு ஆகிய ஊராட்சிகளில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடைகள், தென்பாதி மற்றும் மலைமேடு ஊராட்சி களில் கூடுதல் இரண்டு வகுப்பறை கட்டடங்கள் உள்ளிட்ட கட்டடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழ்நாடுமுதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி அவர்கள் வாழ்வில் முன்னேற்றமடையும் வகையில் பல்வேறு சீரிய திட்டங்களை அறிவித்து செம்மையாக செயல்படுத்தி வருகிறார்கள்.

கிராமப்புற மக்களின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையிலும், தங்கள் ஊராட்சிகளிலே அரசு சான்றுகள், வீட்டுவரி, சொத்துவரி, குடிநீர்வரி கட்டிடும் வகையில் குமராட்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூடு வெளிச்சாவடி, வெள்ளூர் மற்றும் அத்திப்பட்டு ஊராட்சிகளில் தலா ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டள்ள ஊராட்சி செயலக கட்டடங்கள் மற்றும் ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புடையூர் மற்றும் முடிகண்டநல்லூர் ஊராட்சிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தலா ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி செயலக கட்டடம், சோழத்தரம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.23.57 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

பொதுமக்களின்அடிப்படைஉணவு தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில் நங்குடி மற்றும் காவாலக்குடி ஊராட்சிகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் தலா ரூ.13.16 இலட்சம் மதிப்பீட்டிலும், முடிகண்டநல்லூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.9.12 இலட்சம் மதிப்பீட்டிலும், எசனூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.8.10 இலட்சம் மதிப்பீட்டிலும், மலைமேடு ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.12.42 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடைகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது. அவ்வகையில் சமூக பாதுகாப்பு திட்டம் சிறந்த முறையில் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், பச்சிளம் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சூழலில் கல்வி வழங்க வேண்டுமென்ற அடிப்படையில் இராமாபுரம் ஊராட்சியில் ரூ.11.78 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையக் கட்டடம் மற்றும் பொதுமக்கள் இடைத்தரகர்கள் இல்லாமல் அரசுக்கு நேரடியாக தங்கள் பயிர்களை வழங்கும் வகையிலும், மழை, வெள்ளம் உள்ளிட்ட பாதுகாப்பாக இயற்கை சூழ்நிலைகளால் தானியங்கள் கெட்டுப் போகாமல் பாதுகாத்திடும் வகையில் எசனூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.28.94 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையமும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

பள்ளி மாணவ/மாணவிகள் பாதுகாப்பான சூழ்நிலையில் கல்வி பயில்வதற்கு ஏதுவாக தென்பாதி ஊராட்சியில் கனிமவள நிதியின் கீழ் ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் இரண்டு வகுப்பறை கட்டடத்தையும், மலைமேடு ஊராட்சியில் நமக்குநாமே திட்டத்தின் கீழ் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் இரண்டு வகுப்பறை கட்டடங்களும் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், இயற்கை வளத்தினையும் பாதுகாக்கவும், மண் அரிப்பினை தடுக்கும்விதமாக வல்லம்படுகை ஊராட்சியில் வேளக்குடி பழையகொள்ளிட கரையில் 10 இலட்சம் பனை விதைகள் நடுதல் பணி இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு ஊராட்சியிலும் இப்பனை விதைகள் நடுதல்பணி விரிவுபடுத்தப்படும்.

மேலும்,மகளிர் விடியல் பேருந்து பயணத் திட்டம், எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1000/ உரிமைத் தொகை வழங்கும் கலைஞர் மகளிர் உரிமை திட்டம், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீடு, இல்லம் தேடி கல்விதிட்டம், 1 முதல் 5ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டம், உயர்கல்விக்கு வழிகாட்டும் வகையில் நான் முதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முன்னதாக, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் காட்டுமன்னார்கோயில் வட்டத்திற்குட்பட்ட லால்பேட்டை பகுதியில் வீராணம் ஏரியின் நீர் இருப்பு குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இரா.சரண்யா, ஆத்மா குழு தலைவர் தங்க ஆனந்தன், பேரூராட்சி தலைவர் செல்வி தங்க ஆனந்தன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே. ஆர். கே கோவிந்தராஜன், கே.ஆர்.ராயர், எஸ். செந்தில்குமார் பேரூர் செயலாளர் பூ.செல்வகுமார் மாவட்ட வர்த்தக அணி தலைவர் முத்துராமலிங்கம், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் வாசு.இராஜேந்திரன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆடிட்டர்.கருணாநிதி, ஆசிரியர் மன்றம் பொறுப்பாளர் ஆசிரியர் ரவிச்சந்திரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பூ .சதீஷ்குமார் மற்றும் தங்க வீரவேல் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சென்னையில் பலத்த மழை பெய்தபோது ஒவ்வொரு பகுதிகளிலும் தேங்கிய மழைநீர்,குப்பைகளை அகற்றி,மின் தேவைகளை சரி செய்த சுகாதார ஊழியர்கள், கொசு மருந்து அடித்தும் பணியாற்றிய முன் களப்பணியாளர்களை கௌரவிக்கும் விதமாக சென்னை மாநகராட்சி 4வது மண்டல குழு தலைவரும் 38வது வார்டு கவுன்சிலருமான நேதாஜி யு.கணேசன் ஏற்பாட்டில் 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கி அவர்களுக்கு மரியாதை செய்தார்.மேலும் மழைக்காலம் மட்டுமின்றி எப்போதும் எங்களுடைய பணியில் தோய்வின்றி செயல்படுவோம் என்று உறுதி கூறினர். இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி அதிகாரிகள் ஊழியர்கள் பொதுமக்கள் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. பவள விழா ஆண்டை முன்னிட்டு

தி.மு.க. மருத்துவ அணிச் சார்பில் சமூகநீதி மற்றும் பகுத்தறிவுப் பாசறைக் கூட்டங்கள்!

மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

05/10/2024 அன்று நடைபெற்ற கழக ஒருங்கிணைப்புக் குழு ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் அடிப்படையில், கழக பவள விழா ஆண்டை முன்னிட்டு கழக மருத்துவ அணிச் சார்பில் மண்டல அளவில் 'சமூகநீதி மற்றும் பகுத்தறிவு பாசறைக் கூட்டங்கள்' மற்றும் மருத்துவ அணி நிர்வாகிகளுக்கான ஆய்வுக் கூட்டங்கள் நடைபெறவுள்ளது.

மாதம்	இடம்	பங்கேற்கும் மாவட்டங்கள்
டிசம்பர், 2024	தஞ்சாவூர்	தஞ்சை தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய மாவட்டம், திருவாரூர், நாகை, மயிலாடுதுற
ஜனவரி, 2025	திருவண்ணாமலை	திருவண்ணாமலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு,\ கடலூர் மேற்கு, கடலூர் கிழக்கு, திருப்பத்தூர்
பிப்ரவரி, 2025	கிருஷ்ணகிரி	வேலூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு
மார்ச், 2025	சேலம்	சேலம் மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மத்திய மாவட்டம், தருமபுரி மேற்கு, தருமபுரி கிழக்கு, கரூர், நாமக்கல் மேற்கு, நாமக்கல் கிழக்கு.
ஏப்ரல், 2025	தேனி	மதுரை மாநகர், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, தேனி தெற்கு, தேனி வடக்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு.
மே, 2025	புதுக்கோட்டை	புதுக்கோட்டை தெற்கு, புதுக்கோட்டை வடக்கு, சிவகங்கை, இராமநாதபுரம்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 21.10.2024

மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.,
செயலாளர்
தி.மு.க.மருத்துவ அணி

விபத்து, ஒலி மற்றும் மாசற்ற தீபாவளி!

பொதுமக்களுக்கு அரசு வேண்டுகோள்!

சென்னை, அக். 22 - விபத்து, ஒலி மற்றும் மாசற்ற தீபாவளியை கொண்டாடுமாறு பொதுமக்களுக்கு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தீபாவளித் திருநாள் மக்களால் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் திருநாளாகும். இத்திருநாளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியைவெளிப்படுத்துவார்கள். அதேவேளையில், பட்டாசுகளை வெடிப்பதால் நம்மை சுற்றியுள்ள நிலம், நீர், காற்று உள்ளிட்டவை பெருமளவில் மாசுபடுகின்றன.

பட்டாசு வெடிப்பதால் எழும் அதிகப்படியான ஒலி மற்றும்காற்று மாசினால் சிறுகுழந்தைகள், வயதான பெரியோர்கள் மற்றும் நோய்வாய்பட்டுள்ள வயோதிகர்கள் உடல் அளவிலும் மனதளவிலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடை கோரி உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொதுநல வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தனது 23.10.2018 ஆம் நாளிட்ட ஆணையில், சுற்றுச்சூழலுக்கு உகந்த மூலப்பொருட்களை பயன்படுத்தி பட்டாசுகளை உற்பத்தி செய்ய வேண்டும் எனவும், வருங்காலத்தில் பசுமைப் பட்டாசுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய வேண்டும் எனவும் நிபந்தனைகளை விதித்தது.

மேலும், உச்ச நீதிமன்றம் தனது ஆணையில், பட்டாசுகளை வெடிப்பதால் காற்றின் தரம் பாதிக்கப்படுவது குறித்து போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும், திறந்தவெளியில் குறிப்பிடப்ப பட்ட பகுதிகளில் மட்டுமே பட்டாசுகளை வெடிக்க மாநில அரசுகள் வலியுறுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக தீபாவளி பண்டிகையன்று காலை 6 முதல் 7 மணி வரையும், இரவு 7 முதல் 8 மணி வரையில் மட்டுமே ஒலிஎழுப்பும்பட்டாசுகளை வெடிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்து அனுமதி வழங்கியது.

இந்த ஆண்டும் தீபாவளி பண்டிகை தினத்தன்று, கடந்த ஆண்டைப் போலவே காலை 6 முதல் 7 மணி வரையிலும், இரவு 7 முதல் 8 மணி வரை மட்டுமே பட்டாசுகளை வெடிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பட்டாசுகளை வெடிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேடு குறித்தும் உடல் நலனில் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், போதிய அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதன்படி மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், தேசிய பசுமை படைகள், பசுமை மன்றங்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் மூலம் பொதுமக்களிடையே போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளி கல்வித் துறை, உயர்கல்வித்துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் ஆகிய துறைகளின் செயலாளர்கள், காவல் துறை இயக்குநர், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், சுற்றுச்சூழல் துறை இயக்குநர், மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் ஒத்துழைப்போடு அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் உச்சநீதிமன்ற ஆணையின்படி நடவடிக்கை எடுக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

சுற்றுச்சூழலை பாதிப்பு இல்லாமல் பேணிக் காப்பது நம் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

இதனை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் கீழ்கண்டவற்றைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

பாதுகாப்பான தீபாவளி கொண்டாடுவதற்கு பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டியவை

1. பொதுமக்கள் குறைந்த ஒலியுடனும், குறைந்த அளவில் காற்று மாசுபடுத்தும் தன்மையும் கொண்ட பசுமைபட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும்.

2. மாவட்ட நிர்வாகம் / உள்ளாட்சி அமைப்புகளின் முன் அனுமதியுடன், பொதுமக்கள் திறந்த வெளியில் ஒன்று கூடி கூட்டாக பட்டாசுகளை வெடிப்பதற்கு அந்தந்த பகுதிகளில் உள்ள நலச்சங்கங்கள் மூலம் முயற்சிக்கவேண்டும்.

தவிர்க்க வேண்டியவை

1. அதிக ஒலி எழுப்பும் மற்றும் தொடர்ச்சியாக வெடிக்க கூடிய சரவெடிகளை தவிர்க்கவேண்டும்.

2. மருத்துவமனைகள், பள்ளிகள்,நீதிமன்றங்கள் வழிபாட்டுத் தலங்கள் போன்றஅமைதி காக்கப்படும் இடங்களில் பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

3. குடிசைப் பகுதிகள் மற்றும் எளிதில் தீப்பற்றக் கூடிய இடங்களுக்கு அருகில் பட்டாசு வெடிப்பதை தவிர்க்க வேண்டும்.

ஆகவே, பொதுமக்கள் சுற்றுச் சூழலுக்கு அதிக மாசு ஏற்படுத்தாத பட்டாசுகளை அரசு அனுமதித்துள்ள நேரத்தில் உரிய இடங்களில் கூட்டாக வெடித்து மாசற்ற தீபாவளியை கொண்டாடுமாறு தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அரசின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி

முன்னாள் ஆளுங்கட்சித் தலைவர் சி.வி.மலையன் மறைவு!

இன்று இறுதி ஊர்வலம்!

சென்னை, அக். 22 - சென்னை மாநகராட்சியின் முன்னாள் ஆளுங்கட்சித் தலைவர் - முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் - சி.வி.மலையன் அவர்கள் (93 வயது) நேற்று (21.10.2024) முதிர்வின் காரணமாக மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சி.வி.மலையன் அவர்கள் கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் சூளைமேடு பகுதியில் உறுப்பினராக கட்சியில் சேர்ந்து கழக பணியாற்றி வந்து, பிறகு சூளைமேடு வட்ட கழக செயலாளராகவும் தென் சென்னை மாவட்டத்தின் அவைத் தலைவராகவும் நீண்ட காலம் பணியாற்றி உள்ளார்.

தலைமைக் கழகத்தின் தணிக்கைகுழு உறுப்பினராகவும் இருந்துள்ளார். முதலமைச்சர் தளபதி அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்த 1996 - 2001 காலக்கட்டத்தில் சென்னை மாநகராட்சியின் ஆளுங்கட்சித் தலைவராகவும் , நியமனக்குழு உறுப்பினராகவும் இருந்து பணியாற்றியுள்ளார்.

அதேபோல், கடந்த 2001-2006 காலக்கட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் எதிர்கட்சித்தலைவராகவும் திறம்பட பணியாற்றியுள்ளார்.

தளபதி அவர்கள் சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்த காலக்கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளை யெல்லாம் தொகுத்து 'சரித்திரம் படைத்த சாதனையாளர்' என்ற நூலினை எழுதி வெளியிட்டார்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், "தம்பி மு.க.ஸ்டாலின் மேயராக பொறுப்பேற்றிருந்த காலத்தில் சென்னை மாநகருக்காக ஆற்றிய அரும் பணிகளையெல்லாம் புள்ளி விவரங்களோடு தெரிந்து கொள்ள இந்த அரிய நூலினைப் படித்தாலே போதும் என்ற அளவிற்கு மலையன் அவர்களின் இந்த முயற்சி அமைந்துள்ளது பாராட்டுகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

அதேபோல், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்தாட்சியின் தாக்கத்தில் உருவான முற்போக்கு கருத்துள்ள இவரது 'நினைவில் மலர்ந்தவை' என்ற சிறுகதை தொகுப்பு நூல் கலைஞரின் திருக்கரங்களால் வெளியிடப்பட்ட வாய்ப்பும் பெருமையும் பெற்ற. மூத்த கழகத் தோழர் சி.வி.மலையன் அவர்கள்

அன்னாரது இறுதி நிகழ்வு இன்று (22-10-2024) காலை 10.00 மணிக்கு எண். 6B, ஆத்தரேயபுரம் மெயின் ரோடு. சூளைமேடு, சென்னை 94. (சூளை மேடு காவல் நிலையம் எதிரில்) என்ற முகவரியில் நடைபெறும்.